# இராஜபாளையம் நகராட்சி

**27.08.2018**

திருவள்ளுவர் ஆண்டு 2047 விளம்பி வருடம் ஆவணி மாதம் 11ம் தேதி 2018ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி திங்கள் கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமி ராஜா நினைவுக் கூட்ட மண்டபத்தில் மாலை 04.00 மணிக்கு இந்நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

**வருகை– திரு.க.அச்சையா, எம்.எஸ்.சி.,எம்.பில் தனி அலுவலர்**

(1 ) இராஜபாளையம் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் (Swachh Bharat Mission ) 2018-19ன் கீழ் கண்ட விபரப்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை திட்டத்திற்கான நிதிவடிவமைப்பில் (Funding Pattern) மேற்கொள்ளவும், அதற்காக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண்22866/P3 /2018 நாள் 23.08.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **I நுண் உரம் செயலாக்கம் மையம் அமைத்தல்**

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மங்காபுரம் நகராட்சி பழைய மாட்டுக் கொட்டத்தில் 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி மேற்கொள்ளவும் உர செயலாக்க மையத்திற்கு சாலை மற்றும் சுற்று சுவர் உள்ளிட்ட உள் கட்டமைப்பு பணி மேற்கொள்ள | 73.00 |
| 2 | ஸ்ரீரெங்கபாளையம் பகுதியில் 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி மேற்கொள்ளவும் மற்றும் சாலை மற்றும் சுற்று சுவர் உள்ளிட்ட உள் கட்டமைப்பு பணி மேற்கொள்ள | 73.00 |
| 3 | வார்டுஎண்.40 பி.ஏ.சி.ஆர்.சாலை அருகில் 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி மேற்கொள்ளவும் சாலை, மற்றும் சுற்று சுவர் உள்ளிட்ட உள் கட்டமைப்பு பணி மேற்கொள்ள | 73.00 |
| 4 | மாடசாமி கோவில் ரோடு 60 அடி குறுக்கு சாலையில் 2.00 மெட்ரிக் டன் நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி மேற்கொள்ளவும் மற்றும் சாலை சுற்று சுவர் உள்ளிட்ட உள் கட்டமைப்பு பணி மேற்கொள்ள | 36.50 |
| 5 | நகராட்சி அலுவலகம் பின்புறம் 2.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி மற்றும் சாலை, சுற்று சுவர் உள்ளிட்ட உள் கட்டமைப்பு பணி மேற்கொள்ள | 36.50 |
| | மொத்தம் | **292.00** |

அலுவலக குறிப்பு

**அ)** பதிவு செய்யலாம்

**ஆ)** நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**இ)** திட்டத்திற்கான நிதி வடிவமைப்பில் குறிப்பிடப்பட்டவாறு திட்ட மதிப்பீட்டில் மத்திய மாநில அரசுகளின் பங்குத்தொகை போக நகராட்சியின் பத்து சதவீத பங்குத்தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.646அனுமதிக்கப்பட்டது.**

**2.**விருதுநகர் மாவட்டம் சிறப்பு நிலை நகராட்சியில் 2002ம் வருடத்தில் பல்லுார் பன்மியச்சட்டம் (மத்தியசட்டம்) 2004ம் வருடத்திய பல்லுார் பன்மிய விதிகள் மற்றும் 2017ம் வருடத்தில் தமிழ்நாடு பல்லுயிர் பன்மிய விதிகள் ஆகியவற்றில் தொகுத்தளிக்கப்பட்ட வழி காடு நெறிமுறைகளுக்கு இணங்க, இந்நகராட்சியில் தனித்துவமிக்க தாவரங்கள் மற்றும் பல்லுயிர்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக கீழ்க்கண்ட உறுப்பினர்களை கொண்ட பல்லுயிர் பன்மிய மேலாண்மை குழு தோற்றுவிக்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | 1.திரு.க.அச்சையா<br>தனி அதிகாரி மற்றும்<br>நகராட்சி ஆணையாளர்<br>இராஜபாளையம் | –குழுத்தலைவர் |
| 2. | திருமதி.த.பத்மா<br>க/பெ.தங்கவேல்<br>528/36 பூபால் பட்டி தெரு<br>இராஜபாளையம் | –உறுப்பினர் |
| 3. | திருமதி. மா.கலைவானி<br>க/பெ.மாரியப்பன்<br>375/546 பூபால்பட்டி தெரு<br>இராசுபாளையம் | –உறுப்பினர் |
| 4. | திரு.ஆர்.சின்னசாமி<br>த/பெ.ராமசாமி<br>139A காமராஜ் நகர்<br>இராஜபாளையம் | –உறுப்பினர் |
| 5. | திரு.A.பொன்னுச்சாமி<br>த/பெ.அய்யனார்<br>184/9 செல்லம் தெற்கு தெரு<br>இராஜபாளையம் | –உறுப்பினர் |
| 6. | திரு.மு.ராஜா பேகன்<br>த/பெ.முத்துச்சாமி<br>குமரன் தெரு<br>இராஜபாளையம் | –உறுப்பினர் |

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.647அனுமதிக்கப்பட்டது.**

**3.**இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் பணி நவீன முறையில் குளோரினேசன் செய்து சுத்திகரிப்பு செய்தவற்கு தலைமை நீரேற்று நிலையத்தில் 5 MLD திறன் கொண்ட எலக்ட்ரோ குளோரின் இயந்திரம் 2 எண்ணம் நிறுவதல் பணி செய்தமைக்கு பணி தரக்காப்பு தொகை ரூ.93249/– காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு பக்கம் 161 வரிசை எண் 108ன்படி திரும்ப வழங்க காலவாரி ஆகி விட்டதால் மன்ற அனுமதி வழங்க ஆணை வேண்டப்படுகிறது. (இ2/963/2014)

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.648அனுமதிக்கப்பட்டது.**

**4.**இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணியாற்றும் திரு.P.பெரியசாமி மற்றும் 4 பணியாளர்கள் 1987ம் ஆண்டில் தினக்கூலியாக பணியாற்றி 01.06.2009 முதல் நிரந்தரப்பணியாளராக பணியாற்றுவதால் தான் 1987 முதல் தினக்கூலியாக பணியாற்றிய காலங்களில் 50 % பணியை பணிக்காலமாக எடுத்துக் கொள்ளும் பொருட்டு வழக்கு தொடரப்பட்டு (வழக்கு எண் W.P.M.D.No.36/40/13) இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.A.ஜனார்த்தனன் ஆஜராகி இருந்த நிலையில், தற்போது வழக்கறிஞர் திரு.A.ஜனார்த்தனன் ஆஜராகவில்லை.

எனவே அன்னார் ஆஜராகாத காரணத்தினால் தற்போது வழக்கறிஞர் திரு.N.திலிப்குமார் ஆஜராகவும், அதற்கு செலவாகும் செலவுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது. (எச்1/187/2013)

அ.கு. 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.வழக்கறிஞர் திரு.A.ஜனார்த்தனன் என்பவருக்கு பதிலாக திரு.N.திலிப்குமார் ஆஜராகுவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.649அனுமதிக்கப்பட்டது.**

**5.**இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண் 27க்கு (மாற்றுத்தினாளிக்கு ஒதுக்கப்பட்டது) பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 31.07.2018ல் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படியான நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளனர் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் முகவரி | மாத வாடகை தொகை |
|---|---|---|
| 1. | எஸ்.குதாயத்துல்லா<br>7/1 நந்தவனம்பட்டி தெரு<br>ஸ்ரீவில்லிபுத்தூர் | ரூ.1550.00 |
| 2. | காஜாமைதீன்<br>164E2, சீதக்காதி தெரு<br>இராஜபாளையம் | ரூ.1200.00 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ்.குதாயத்துல்லா என்பவர் மாத வாடகை தொகை ரூ.1550/—க்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்.

முன்னார் ஒப்பந்ததாரர் திரு.முனியராஜ், ஜமின் நத்தம்பட்டி என்பவர் புதிய பேருந்து நிலைய கடை எண் 27ஐ (மாற்றுத்திறனாளிக்கு ஒதுக்கப்பட்டது) எடுத்து தொழில் செய்து வந்தார். அன்னார் தொழில் சரியாக வியாபாரம் இல்லாததாலும் மாத வாடகையினை நகராட்சியில் முறையாக செலுத்தாமல் உள்ளதாலும் நகராட்சியிலிருந்து 28.03.2016ல் கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டது. அன்னார் இதற்கு முன்பு மாத வாடகையாக ரூ.6900/—க்கு எடுத்து இருந்தார்

01.04.2016 முதல் மேற்கண்ட இனம் ஏலம் போகவில்லை. மேலும் சமூக விரோதிகள் இரவில் மேற்கண்ட புதிய பேருந்து நிலைய கடை எண் 27ஐ (மாற்று திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டது) இரவில் மேற்கண்ட கட்டிடத்தில் முறையற்ற செயலாக்கில் ஈடுபட்டு வருவதாலும், பலமுறை ஏலம் கோயிம் எவரும் முன் வரவில்லை. இனியும் நிதி இழப்பினை தரிர்க்கும் பொருட்டு ரூ.1550/—க்க

உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.குதாயத்துல்லா (மாற்றுத்திறனாளி) என்பவரது உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (அ1/947/2015)
அ.கு.அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.650அனுமதிக்கப்பட்டது.**

**6.**இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்12, சின்னச்சுரைக்காய்பட்டி தெருவில் குடியிருக்கும் திரு.இரா.பரமசிவம் த/பெ.இராமசாமி என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் I.A.No.610,OS.No.186/2018. நாள் 06.08.2018ன்படி (வாய்தா நாள் 14.09.2018) சொத்துவரி (2017 வருடம்) உயர்வினை எதிர்த்து, இந்நகராட்சி மீது வழக்கு தொடந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.காளிதாஸ், எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகி நடத்திடவும் இவ்வழக்கிற்கான செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4517/2018எ2)
அ.கு.அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.651அனுமதிக்கப்பட்டது.**

**7.**இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்12, சின்னச்சுரைக்காய்பட்டி தெருவில் குடியிருக்கும் திரு.இரா.பரமசிவம் த/பெ.இராமசாமி என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் I.A.No.609,OS.No.185/2018. நாள் 06.08.2018 (வாய்தா நாள் 14.09.2018) சொத்துவரி (2017 வருடம்) உயர்வினை எதிர்த்து, இந்நகராட்சி மீது வழக்கு தொடந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.காளிதாஸ், எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகி நடத்திடவும் இவ்வழக்கிற்கான செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4516/2018எ2)
அ.கு.அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.652அனுமதிக்கப்பட்டது.**

**8.**இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் 39ற்குட்பட்ட பாண்டிட் சுப்பராஜா தெரு பகுதியில் குடிநீர் விநியோகத்தின் போது மேடான பகுதிக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. ஆகையால் சங்கரன் கோவில் ரோட்டில் உள்ள பிரதான குழாயில் இருந்து (10ன்சி AC Main) பண்டிட் சுப்பராஜா தெருவில் உள்ள பகிர்மான குழாய்க்கு இணைப்பு கொடுக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.47,000/– (ரூபாய் நாற்பத்தேழாயிரம்)ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/4030/2018)
அ.கு.
அ)அனுமதிக்கலாம்.
ஆ)குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.சி.பாஸ்கரன் என்பவர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.653அனுமதிக்கப்பட்டது.**

9.இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட நகரளவு வார்டு சி, பிளாக் 7, நகரளவு எண் 55 மற்றும் 58ல் உள்ள இடங்கள் தொடர்பாக, இந்நகராட்சியை எதிர்த்து, திருமதி.பிரேமலா பாப்புராஜா என்பவரால் ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட அசல் வழக்கு எண் 79/2018 வழக்கில் நகராட்சி சார்பில், நகர்மன்ற வழக்கறிஞர் திரு.K.காளிதாஸ் அவர்கள் ஆஜராவதற்கும், மேற்படி வழக்கின் செலவுத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எப்1/4476/2018)

அ.கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.654அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர்/தனி அலுவலர்
இராஜபாளையம் நகராட்சி